


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 306

திங்கட்கிழமை
29 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## ஆசிரியர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப்.29
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அறையொன்றில் தங்கியிருந்த ஆசிரியர் ஒருவர் சடலமாக 11

அரச அடக்குமுறைக்கு எதிராக

# மன்னாரை முடக்கி இன்று போராட்டம்!

அனைத்துத் தரப்புகளுக்கும் அழைப்பு

**மன்னார், செப்ரெம்பர் 29**

**மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலைத் திட்டத்துக்கு எதிராகவும், மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்தும் இன்று மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள பொதுமுடக்கல் போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.** 09



## அமல் சில்வா கைது

கொழும்பு, செப்.29
மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தெஹிவளை 09

## தோட்டத்துக்கு சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்., செப்.29
தோட்டத்துக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர் சடலமாக மீட்கப் 11

## மக்கள் மீது மன்னாரில் தாக்குதல் கட்டைக்காட்டில் கண்டனப்போர்

யாழ்ப்பாணம், செப்.29
மன்னார் காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீதும், பங்குத்தந்தையர் மீதும் பொலிஸார் நடத்திய தாக்குதலைக் கண்டித்து வடமராட்சி கிழக்கு, கட்டைக்காட்டில் நேற்று அமைதிவழிப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. 11

வல்வெட்டித்துறை

## நகரசபை உறுப்பினராக பதவியேற்கவுள்ள சிவாஜி



வடமராட்சி, செப்.29
வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் ஒருவர் பதவி விலகியுள்ள நிலையில், எம்.கே.சிவாஜிலிங்கம் விரைவில் உறுப்பினராக பதவி ஏற்க உள்ளார் என்று தெரியவருகின்றது. 11

## வீதியின் குறுக்கே நின்றால் அகற்றத்தான் செய்வார்களாம்!

மன்னார் தாக்குதல் சம்பவத்துக்கு ஜெகதீஸ்வரன் எம்.பி. விளக்கம்

வவுனியா, செப்.29
வீதியின் குறுக்கே நின்றால் பொலிஸார் வெளியேற்றத்தான் செய்வார்கள் என்று மன்னாரில் பொதுமக்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவத்துக்கு விளக்கம் கொடுத்துள்ளார் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன். 11



## மஹிந்தவின் வீடு சென்று நன்றி பாராட்டிய ரணில்!

கொழும்பு, செப்.29
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தங்காலையிலுள்ள கால்டன் இல்லத்துக்குச் சென்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை நேற்றுச் சந்தித்துள்ளார். 11



## திடீர் சுகவீனமுற்ற பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப்.29
திடீர் சுகவீனமுற்ற பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், கொட்டடியைச் சேர்ந்த தி.பிறேமநளினி (வயது-46) என்பவரே உயிரிழந்துள்ளார். 11

## அனைத்தையும் எதிர்க்கும் மனநிலை மாறவேண்டும்

வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.29
எல்லாவற்றையும் எதிர்ப்பது என்ற மக்களின் மனநிலையில் மாற்றம் வேண்டும். கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு பேரம்பேசி எமக்குத் தேவையானதை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும். அதன் ஊடாகவே எமது மாகாண மக்களின் 11

## தமிழக மீனவர்கள் 12 பேருக்கு முதலாம் திகதிவரை மறியல்!

யாழ்ப்பாணம், செப்.29
இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவு அருகே கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 12 பேரும் எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப் 11

### முச்சந்தி முரளி

'குறுக்கால போறவைதான் இப்பிடி பொலிஸுக்கு முரட்டு முட்டுக் குடுப்பினம் கண்டியளோ'

## ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

தலைமன்னாரில் சம்பவம்

மன்னார், செப்.29
தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதி நேற்று ஒருவர் உயிரிழந்துள்ளார். 11

## கட்டுப்பாடிழந்த மோ.சைக்கிள்; 5 வயது சிறுமி பரிதாப மரணம்

சங்குப்பிட்டிப் பாலமருகே சோகம்

யாழ்ப்பாணம், செப்.29
சங்குப்பிட்டிப் பாலமருகே கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் 5 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந் 09

## நினைவுகூரல்களுக்கு முழுமையான சுதந்திரம்

வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் விளக்கம்

கொழும்பு, செப்.29
கடந்தகால அரசாங்கங்கள் நினைவுகூரலுக்கான உரிமைகளைக் கட்டுப்படுத்தின. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நினைவு 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 28.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4208 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 05 29 75 76 |
| விசேட எழுத்து | U |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 28.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1275 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 19 25 37 48 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 28.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0234 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 1 1 7 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 28.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2314 |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 18 19 21 67 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 28.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5966 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 8 1 3 5 2 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 28.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1996 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 10 36 52 58 |
| விசேட எழுத்து | S |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 28.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0541 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 3 5 2 0 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 28.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0082 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 10 11 49 |

# அரசின் பயங்கரவாத அட்டூழியத்தை அனைவரும் எதிர்க்கவேண்டும்

## கஜேந்திரகுமார் எம்.பி. அழைப்பு

**யாழ்ப்பாணம், செப்.29**

**மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் அரச பயங்கரவாதச் செயற்பாடுகளை அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து எதிர்க்கவேண்டும். அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களின் இருப்பை அழிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளைத் தமிழ்பேசும் மக்களாக நாமனைவரும் ஒன்றிணைந்து குரல்கொடுக்க வேண்டும்.**

இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கொக்குவிலுள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசு தேர்தலுக்கு முன்னர் மக்களின் வாக்கைப் பெறுவதற்காக மக்களுக்கு நன்மை பயக்கும் விதமான வாக்குறுதிகளை வழங்கிவிட்டுத் தற்போது அதற்கு முற்றுமுழுதாக நேர்மாறாகச் செயற்பட்டுவருகின்றது. மன்னாரில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அரசின் செயற்பாடுகள் ஊடாக இந்த விடயம் தெளிவாகப் புலப்படுகிறது. நாம் மன்னாரில் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுத் திட்டத்துக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், மக்களுக்கும் எங்கள் பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்குகின்றோம். மன்னார்த் தீவைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் எடுக்கவிருக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாங்கள் எங்கள் நிபந்தனையில்லாத ஆதரவை வழங்கத் தயாராகவிருக்கின்றோம் - என்றார். (ச-66)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 28.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0674 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| M | 3 7 0 8 5 6 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2940 | N | 05 08 49 53 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| E | 02 04 21 22 | 5101 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 28.09.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0780 | 17 25 48 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 22 40 45 53 | 4652 |

| KAPRUKA | | | | |
|---|---|---|---|---|
| திகதி | தினம் | | | |
| 28.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் | |
| O | 37 | 10 16 57 71 | 2116 | |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 28.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 28 39 40 71 | 2766 |

# மக்களுக்கு மதிப்பளிக்காது காற்றாலைத்திட்டம்

## பொலிஸாரின் அடக்குமுறைக்கு ஐ.ம.சக்தி கண்டனம்



கொழும்பு, செப்.29

மன்னார் காற்றாலை விவகாரத்தில் அரசாங்கம் முறையற்றவகையில் செயற்பட்டுள்ளது. அந்த பிரதேச மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மற்றும் மதத்தலைவர்கள்மீது தாக்குதல் நடத்தியுள்ளமை வன்மையாக கண்டிக்கத்தக்கது என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதானி நிறுவனத்துடனான மன்னார் காற்றாலைத் திட்டத்தை கடந்த அரசாங்கம் கைச்சாத்திட்டது. இந்தக் கருத்திட்டத்தில் இருந்து விலகுவதாக தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் வடக்கு மாகாண மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது.

இலங்கையின் மிகப்பெரிய தீவாகக் கருதப்படும் மன்னார்த் தீவின் இயற்கை அம்சங்களை பாதுகாக்கவேண்டும். மன்னார் காற்றாலைக் கருத்திட்டத்தை மீள ஆரம்பிப்பது தொடர்பில் வெளிப்படையானவகையில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் எவ்விதமான பேச்சுமின்றி கருத்திட்டத்தின் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரத்தில் அரசாங்கம் முறையற்ற வகையில் செயற்பட்டுள்ளது. அந்தப் பிரதேச மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மற்றும் மதத் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது - என்றார். (ச-இ)

# அரசியல்வாதிகள் சொத்து; துழாவுகின்றது சி.ஐ.டி.

கொழும்பு,செப்.29

முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட 20 அரசியல்வாதிகளின் சட்டவிரோதச் சொத்துகள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத்துறை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நாமல் ராஜபக்ச, ரோஹித அபேகுணவர்தன, மஹிந்த அமரவீர, பியசேன கமகே, பவித்ரா வன்னியாராச்சி, வஜிர அபேவர்தன, துமிந்த திசாநாயக்க, எஸ்.எம். சந்திரசேன, சாகல ரத்நாயக்க, மனுஷ நாணயக்கார, முன்னாள் பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ச, திஸ்ஸ குட்டியாராச்சி மற்றும் குருநாகல் மாநகர சபை முன்னாள் முதல்வர் துஷார சஞ்சீவ விதாரண உள்ளிட்ட 20 நபர்களின் சொத்துகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-இ)

# கேப்பாப்பிலவில் இராணுவ வசமுள்ள 190 ஏக்கர் காணிகளை விடுவியுங்கள்

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு,செப்.29

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவுப் பிரதேசத்தில் இராணுவத்தின் வசமுள்ள 190 ஏக்கர் காணிகளை விடுவித்து, அந்தப் பகுதி மக்களை உடனடியாக அவர்களது பூர்வீக வாழிடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கேப்பாப்பிலவு மக்கள் கடந்த காலங்களில் பெரும் போராட்டங்களை நடத்தியதால், இராணுவத்தினர் கையகப்படுத்தியிருந்த சில ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன. எனினும் 190 ஏக்கர் காணிகள் இன்னும் விடுவிக்கப்படாமலுள்ளன. அந்தக்காணிகள் விடுவிக்கப்படவேண்டும். மாவட்டத்துக்கு வருகைதரும் அமைச்சர்களைக் கேட்டால், அவர்களும் அதேபதிலையே கூறுகின்றனர். கேப்பாப்பிலவை பூர்வீகமாகக் கொண்ட 60 குடும்பங்கள் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் அவலவாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். எனவே மக்களை உடனடியாக அவர்களுடைய பூர்வீக வாழிடங்களில் மீள்குடியேற்றம் செய்யவேண்டும்- என்றார். (க-246,26)

# ஐ.தே.க.தலைமை ஏற்பதற்குத் தயார்!

## நவீன் திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.29

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவர் உட்பட கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த மனதுடன் தலைமைப்பதவியை எனக்கு வழங்கும் பட்சத்தில் அதனை ஏற்பதற்கு தயாராக இருக்கின்றேன் என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைந்து பயணிப்பதற்குரிய பேச்சுகள் இடம்பெற்றுவருகின்றன. ஒன்றிணைப்பதற்குரிய முயற்சியிலேயே நான் ஈடுபட்டுவருகின்றேன். ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைந்து மாகாணசபைத் தேர்தலை எதிர்கொண்டால் முதல்வர் வேட்பாளராகக் களமிறங்குவதற்கும் தயார் அவ்வாறு போட்டியிட்டால் என்னால் வெற்றிபெற முடியும்- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் பொலிஸார் அராஜகம் அரசின் கீழ்த்தர செயல் நிரூபிப்பு

*மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம்*

**யாழ்ப்பாணம், செப்.29**

**காற்றாலை மற்றும் கனிய அகழ்வுத் திட்டத்துக்கு எதிராக 55 நாள்களுக்கு மேல் போராடிக்கொண்டிருக்கும் மன்னார் மக்களை அடித்துத் துன்புறுத்தியமையூடாக அநுர அரசாங்கம் கீழ்த்தரமான செயற்பாட்டை நிரூபித்துள்ளது. இந்தச் சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டும் என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலரும் மூத்த பொதுவுடைமைவாதியுமான சி.கா.செந்திவேல் தெரிவிக்கையில்,

மன்னார்த் தீவு மக்களின் தொடர்ச்சியான போராட்டம் காரணமாக மன்னார் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுத் திட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தி மக்களின் கருத்துகளைக் கேட்டறிந்து முடிவுக்கு வருவதாக ஜனாதிபதி அறி வித்திருந்தார்.

இந்தநிலையில் எரிசக்தி அமைச்சர் தலைமையிலான குழுவினர் மன்னார்த் தீவுக்கு சென்று மக்களிடம் கருத்துக் கேட்டபோது மக்கள் அந்தத் திட்டத்தை மிகக் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

அண்மையில் ஜனாதிபதி செயலகத்துக்குமுன்பாகவும்போராடி முழு நாட்டுக்கும் தமது கோரிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதனைப் புறந்தள்ளி காற்றாலைத் திட்டத்துக்குரிய விசிறிகளை மன்னார்த் தீவுக்குக் கொண்டுவந்துள்ளனர். அதனைத் தடுக்கமுயன்ற பெண்கள், இளைஞர்கள், மதகுருமார்கள் உட்பட மக்களை அடித்துக்காயப்படுத்திக் கேவலமான அரச அடக்குமுறையை அநுரவின் பொலிஸ் படை மேற்கொண்டுள்ளது. இந்தச் செயல்மூலம் அரசாங்கம் உழைக்கும் மக்கள் பக்கம் இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்திருக்கிறது - என்றார். (ச-66)



# இலங்கைப் பிரஜைகளின் வாழ்க்கைத்தரம் மேம்பாடு

*ஜப்பானில் அநுர பெருமிதம்*

கொழும்பு,செப்.29

இலங்கை தொடர்ந்து சவால்களை எதிர்கொண்டபோதும், தற்போது பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைந்து வருகின்றது. அபிவிருத்தியின் பலன்கள் பரவலாகப் பகிரப்படுகின்றன. அனைத்துப் பிரஜைகளதும் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படுகின்றது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ஒசாகா நகரில் இடம்பெற்ற "எக்ஸ்போ 2025" கண்காட்சியில் பங்கேற்றார். நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகளவில் மாற்றங்கள் இடம்பெறும் தருணத்தில், இலங்கை பொருளாதாரப் பயணத்தில் ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது.

ஜப்பான் இலங்கையின் நெருங்கிய நண்பன். பல கடினமான காலங்களில் ஆதரவளித்து பங்காளியாகவும் திகழ்கின்றது. இந்தக் கண்காட்சி ஊடாக இலங்கையின் பண்டைய கலாசாரப் பாரம்பரியம், இயற்கை அழகு, கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்கள், அத்துடன் தேயிலை, இரத்தினக் கற்கள் மற்றும் மசாலாப் பொருள்கள் போன்ற பிரபலமான தயாரிப்புகளை உலகுக்குக் காட்சிப்படுத்த எமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது- என்றார். (சு-இ)

## நடப்பாண்டில் 1,916 விபத்துகள்; 2,037 பேர் பலி!!

கொழும்பு, செப்.29

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் ஆயிரத்து 916 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துகளின்போது 2 ஆயிரத்து 37 பேர் உயிரிழந்துள்ளதுடன் 3 ஆயிரத்து 787 பேர்காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## அரச அலுவலக வாகனங்களில் ஸ்ரிக்கர்கள் தடை

கொழும்பு,செப்.29

வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் அல்லது பிற நிபுணர்கள், பாடசாலைகள் அல்லது பல்கலைக்கழகங்களைக் குறிக்கும் வகையில் வாகனங்களின் முன் கண்ணாடியில் பல்வேறு அளவுகளில் ஸ்டிக்கர்களை ஒட்டுவது சட்டவிரோதமானது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# பெண் தலைமைக் குடும்பங்கள் இலங்கையில் 1.2 மில்லியன்

கொழும்பு, செப்.29

இலங்கையில் 1.2 மில்லியன் குடும்பங்கள் பெண்களால் தலைமை தாங்கப்படுவதாக களனிப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனோஷா எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகரித்துவரும் விவாகரத்து விகிதம் காரணமாக பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

பெண்களைப் பொருளாதார ரீதியாக அதிகாரம் அளிப்பதன் அவசரத் தேவை எழுந்துள்ளது. அவர்களின் நிதி ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவது அவர்களின் குடும்பங்கள் மற்றும் பரந்த சமூகத்தின் நல்வாழ்வுக்கு அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




## பாவத்தின்ர சம்பளம்

நேற்று எல்லா இடமும் விஜயின்ர கூட்டத்துக்குப் போன சனம் செத்ததைப் பற்றித்தான் கதை. என்னதான் தமிழகம் இந்தியாவில இருந்தாலும், அங்கத்தை விசயங்களில எப்பவும் எங்கட ஆக்களுக்கு தனி ஈடுபாடு இருக்கு. அதிலையும் சினிமா, அரசியல் எண்ட ரண்டு விசயத்தையும் உன்னிப்பா பார்த்துக் கதைப்பினம். அதோட இப்பிடி ஒரு பிரசாரக் கூட்டத்தில 39 பேர் நசிஞ்சு செத்தது எண்டது பெரிய விசயம்தானே. அதாலதான் எல்லாரும் உதைப்பற்றிக் கதைச்சிருக்கினம். சும்மா கதைச்சதோட நிக்காமல் உந்தச் சாவுகளுக்கு ஆர் காரணம்? எண்டும் ஒவ்வொருத்தரும் தங்கட கோணத்தில சொல்லிக்கொண்டிருந்தவை. "உவர் விஜய் சொன்னநேரத்துக்கு போயிருந்தால் இப்பிடிப் சனம் நசிஞ்சு செத்திருக்குமோ?" எண்டு சிலரும், "உதெல்லாம் விஜயை ஒழிக்க தி.மு.க.காரர் செய்த சதி" எண்டு இன்னும் கொஞ்சப்பேரும் சொல்லிச்சினம்.

கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தால், உந்த 39 பேரின்ர சாவுக்குப் பின்னால பெரிய அரசியல் சதி இருக்குமோ எண்டு கனபேருக்குச் சந்தேகம் வாறதில பிழையில்லை. ஏனெண்டால் தங்களுக்கு அரசியல் வங்குரோத்து வரேக்க, இப்பிடி அப்பாவிச் சனங்களின்ர உயிரைப் பகடையாக்கி விளையாடுறது அரசியல்வாதியளுக்குப் பொழுதுபோக்கு. நல்லாட்சிக் காலத்தில ராஜபக்ச குடும்பம், இனிமேல் அரசியலில தலையெடுக்கவே ஏலாது எண்டு எல்லாரும் நினைச்சவை. அந்தநேரம் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நடந்து நாடே அல்லோலகல்லோலப்பட்டது. கிட்டத்தட்ட 250 அப்பாவிச்சனங்கள் அந்தக் குண்டுவெடிப்பில அநியாயமாச் செத்தவை. அதுக்குப் பிறகு இஞ்ச அரசியலே தலைகீழா மாறிட்டுது. எந்த ராஜபக்ச குடும்பம் வேண்டாம் எண்டு சனங்கள் தோற்கடிச்சினமோ அதே ராஜபக்ச குடும்பத்தில, கடும்போக்கு கொண்ட கோத்தாபயவை ஜனாதிபதியாக்கி, மொட்டுக்கட்சியிட்ட ஆட்சிபோற அளவுக்கு அரசியல் மாறுறதுக்கு காரணமே ஈஸ்டர் தாக்குதல்தான். என்னதான் சஹ்ரான் கும்பல்தான் இந்தக் குண்டுகளை வெடிக்கவைச்சது எண்டு சொல்லிக்கொண்டாலும், அந்தக் கும்பலை இயக்கின சூத்திரதாரி ஆரெண்டதும், அந்தக் குண்டுவெடிப்பை வைச்சு அரசியல் ஆதாயம் தேடினவை ஆரெண்டதும் எல்லாருக்குமே தெரியும். இப்பிடிச் சனத்தைப் பலிகுடுத்து பதவியில இருந்தவைக்கு பிறகு அரகலயவில என்ன நடந்ததெண்டும் உலகமே அறியும். நாய் வித்த காசு குரைக்காதுதான். ஆனால் பாவத்தின்ர சம்பளம் சும்மா விடாது எண்டதுக்கு ராஜபக்ச குடும்பம் நல்ல உதாரணம்.

இஞ்சதான் இப்பிடிச் சனத்தைப் பலிக்கடாவாக்கி அரசியல் செய்யினம் எண்டு நினைக்காதையுங்கோ. இஸ்ரேலிலகூட எலக்சன் வருகுதெண்டால், பலஸ்தீனத்துக்கு தங்கட ஆமியைக் கூடுதலா அனுப்பி, வழக்கத்தைவிட கூடச் சனத்தைக் கொல்லுவாங்கள். பிறகு அதைவைச்சு எலக்சனில வெல்லுவாங்கள். இப்பிடித் தங்கட அரசியலுக்காக, தங்கட ஆட்சி பறிபோகக்கூடாது எண்டு தமிழகத்திலையும் சதி நடக்கவும் சான்ஸ்கூட இருக்கு. ஏனெண்டால் தமிழகத்தில முந்தநாள் விஜய் போன கரூர்ல, செந்தில் பாலாஜி எண்டு ஒரு தி.மு.க. எம்.எல்.ஏ. இருக்கிறார், அவர்தான் இப்ப தி.மு.க.வில பெரிய கை. அப்பிடிப்பட்டவர் தன்ர ஊரில விஜய் வந்து, தனக்கே ஆப்பு வைச்சிட்டுப் போறதை விரும்பமாட்டார். அதாலதான் இப்பிடி ஒரு சதியைச் செய்திருப்பார் எண்டு அங்கையுள்ள சனங்களே சொல்லுகினம். ஆனால் என்னதான் சதி செய்தாலும், சொன்ன நேரத்துக்கு கூட்டம் நடக்கிற இடத்துக்குப் போகாததும், இப்பிடி நிறையச் சனத்தை கட்டுப்படுத்த ஏலாமல் விட்டதும் விஜய் தரப்பின்ர பிழைதானே. எண்டாலும் இன்னும் சில விசயங்கள் உறுத்தத்தான் செய்யுது. இப்பிடி ஒரு அசம்பாவிதம் நடந்த அடுத்த 20 நிமிசத்திலையே தி.மு.க.வின்ர பெருங்கை செந்தில் பாலாகி, கரூர் ஆஸ்பத்திரிக்கு வந்திட்டார். விஜய் வாற நேரம் ஏன் செந்தில் பாலாஜி சென்னையை விட்டிட்டு தன்ர சொந்த ஊருக்கு வந்தவர்? என்னெண்டு சம்பவம் நடந்த ஒரு மணித்தியாலத்திலேயே விசாரணைக் குழுவை நியமிச்சவை? என்டெல்லாம் கனக்கடவுட் இருக்குது. ஆனால் என்னதான் திருகுதாளம் செய்தாலும், நல்லா ஆட்சி செய்யாட்டி அவையைச் சனங்கள் தூக்கியெறியிறது மட்டும் உண்மை.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**இடபம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படக்கூடும்.

# புழுதியாற்று நீர்ப்பாசனத் திட்டம் சூரியமின்சாரத்தில் மீள ஆரம்பம்

கிளிநொச்சி, செப்.29

**கிளிநொச்சி மாவட்டத்தில் கைவிடப்பட்டநிலையில் காணப்பட்ட புழுதியாற்று ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் மீண்டும் கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.**

2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புழுதியாற்று ஏற்றுநீர்ப்பாசனத் திட்டம் 2018ஆம் ஆண்டு கைவிடப்பட்டது.

நீர்ப்பம்பி பொருத்தாமை, மின்சார இணைப்பு இல்லாமை, அதிக எரிபொருள் செலவு போன்ற காரணங்களால் இந்தத் திட்டம் செயலிழந்தது.

இந்தநிலையில் தற்போது சூரிய மின்சாரம்மூலம் நீர்ப்பம்பிகளை இயக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில், வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத்தால் 12 மில்லியன் ரூபா செலவில் சூரிய மின்கலம்மூலமும் இயங்கும் வகையில் புழுதியாற்று ஏற்று நீர்பாசனத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.



தற்போதைய நிலையில் கால் ஏக்கர் வீதம் 30 விவசாயிகள் பயிர்ச்செய்கை செய்யமுடியும். எதிர்காலத்தில் விவசாயிகள் முயற்சிகளைப் பொறுத்து இதனை இன்னமும் விரிவாக்கமுடியும் என ஆளுநர் குறிப்பிட்டார். (ச-113)



## நினைவேந்தல்

திருமலை,செப்.29

திருகோணமலை கடற்கரையில் இடம்பெற்ற 5 மாணவர்கள் படுகொலைக்கான நீதியைக்கோரி போராடிய, கொலையுண்ட மாணவர்களில் ஒருவரான மனோகரன் ரஜீகரின் தந்தை காசிப்பிள்ளை மனோகரனின் நினைவேந்தல் நிகழ்வு திருகோணமலை நகரசபையின் பொது மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் சர்வஜன நீதி அமைப்பின் அமைப்பாளர் சட்டத்தரணி பவானி பொன்சேகா, மனோகரனின் நீதிக்கான போராட்டத்தின் படிமுறைகளை விளக்கி உரையாற்றினார். சர்வஜன நீதி அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், திருகோணமலை மாநகரசபை முதல்வர் க.செல்வராஜா மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-இ)

## வல்வெட்டித்துறையில்

# டெங்கு பெருகும் சூழல் 8,000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம், செப்.29

வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதியில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலைப் பேணிய 10 ஆதன உரிமையாளர்களுக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றால் தலா 8 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை தொண்டைமனாறு கிராம அலுவலர் பிரிவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் உள்ளிட்ட குழுவினரால் கடந்த வியாழக்கிழமை டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது நுளம்பு பெருகக்கூடியவாறான சூழலினை வைத்திருந்த 10 ஆதன உரிமையாளர்களுக்கு எதிராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப. தினேஸினால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்ட அனைத்து ஆதன உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், தலா 8 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அடிப்படையில் மொத்தமாக 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (ச-25-100-20)

## மட்டுவிலிலுள்ள

# பொருளாதார மத்திய நிலையம் நாளை மீண்டும் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப்.29

யாழ்ப்பாணம் மட்டுவிலில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையம் நாளை செவ்வாய்க்கிழமை மீள ஆரம்பிக்கப்படவுள்ளது. இதுதொடர்பில் பொருளாதார மத்திய நிலையக் கடை உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கருத்துத் தெரிவிக்கையில், பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் குறித்தும், அதன் இட அமைவுகள் தொடர்பாகவும் அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினேன். சமூகத்துக்குப் பயனுள்ள வகையில் குறித்த நிலையத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார். கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன், யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டப் பிரதம பொறியியலாளர், சாவகச்சேரிப் பிரதேசசெயலாளர், கணக்காளர், பொருளாதார மத்திய நிலைய முகாமையாளர், வர்த்தகப் பிரதிநிதிகள் மற்றும் பொருளாதார மத்திய நிலையத்தில் கடைகளைக் குத்தகைக்கு எடுத்த குத்தகைக்காரர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

உங்களைத் தவிர வேறு எதுவும் உங்களுக்கு அமைதியைத் தரமுடியாது. மற்றவரை அறிந்தவன் புத்திசாலி; தன்னைத்தான் அறிந்தவன் ஞானி.

— லா ஓட்ஸ் —


# வளைவும், நெளிவும்...!

இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காகவும், ஊக்குவிப்பதற்காகவும் தன்பாலின ஈர்ப்பாளர்களை அங்கீகரித்து வரவேற்கும் திட்டமொன்றுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. ஆண் - பெண் பால்நிலை உறவு தவிர்த்து, வேறு எந்தவொரு பாலியல் நாடுதல்களையும் தவறெனக் கருதும் இலங்கையில்-அதன் கலாசாரத்தில், மேற்கொள்ளப்பட்ட தேவையற்ற தலையீடாகவே, இந்த அங்கீகாரத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

தன்பாலின ஈர்ப்பு அல்லது சுய பால்நிலை நாடல் என்னும் மேற்கத்தேய கலாசாரம் அண்மைக்காலமாக ஆசிய நாடுகளையும் ஒரு கறையான்போன்று மெல்லமெல்ல வேட்டையாடிவருகின்றது. ஆரம்பத்தில் இத்தகைய ஒரு உறவு நிலையை ஆச்சரியமாகப் பார்த்த நாங்கள், தற்போது இந்த விடயம் தொடர்பான உரையாடல்களை மிகச்சாதாரணமாக நடத்துகின்றோம். ஆக, இந்த அசாதாரண மாற்றம் அடுத்த கட்டத்துக்குச் செல்லப்போகின்றது என்ற ஐயப்பாட்டையே, தன்பாலின ஈர்ப்பாளர்களை மையப்படுத்திக் கட்டமைக்கும் இத்தகைய நகர்வுகள் வெளிப்படுத்துகின்றன.பிரிட்டனின் 'ரைம் அவுட்' என்ற இதழ், ஒக்ரோபர் மாதத்தில் உலகளவில் சுற்றுலா செல்வதற்கு மிகச் சிறந்த நாடாக இலங்கையை அடையாளப்படுத்தியுள்ளது. இங்குள்ள மலைகள், ஏரிகள், குளங்கள், அவற்றில் உலவும் யானைகள், மலைகளை ஊடறுக்கும் ரயில்கள், பாலங்கள் என இலங்கை தொடர்பில் மேற்கு நாடுகள் கொண்டிருக்கும் பார்வை அலாதியானது. ஒக்ரோபரில் மட்டுமல்ல, வருடம் முழுவதும் சுற்றுலா செல்வதற்குச் சிறந்த நாடாக இலங்கை இருந்தே வந்திருக்கின்றது. இவ்வாறான நிலையில், சுய பால்நிலை நாடல் என்னும் திட்டங்கள்மூலம் சுற்றுலாவைப் புதிதாக ஈர்ப்பதற்கு என்ன தேவை இருக்கின்றது?

தன்பாலின ஈர்ப்புக்கும், தன்பால் திருமணங்களுக்கும் இலங்கை இன்னமும் சட்டபூர்வ அனுமதி வழங்கவில்லை. சட்டத்துக்கு அப்பாற்பட்ட ஒரு கலாசாரத்தை ஏதோவொரு காரணத்துக்காக முறைப்படி அங்கீகரிக்கின்றபோது ஊக்குவிக்கின்றபோது, அது இங்கு பல்வேறு குழப்பங்களையும், முரண்பாடுளையும், பாரம்பரிய கலாசாரப் பிறழ்வுகளையும் ஊக்குவிக்கும் என்பது குறைந்தபட்சபுரிதலுக்குரிய விடயமே. ஆதலால், இந்த அபத்தமான திட்டம் தொடர்பில் அரசாங்கம் மறு ஆய்வுகளில் முற்றாக ஈடுபடவேண்டும்.

சர்வதேச நாணயநிதியம், 'சுய பால்நிலை நாடலை' தன் நிபந்தனைகளில் ஒன்றாக முன்வைக்கின்றது என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக இருக்கின்றது. பல்வேறு தரப்புகள் - பல்வேறுசந்தர்ப்பங்களில்இந்தநிலைப்பாட்டைக் கண்டித்துள்ளன. எனவே, நாணயநிதியத்தின் அடுத்தகட்ட கடனுதவிகளுக்காகத்தான் இத்தகைய செயற்றிட்டங்களுக்கு இலங்கை வளைகின்றதா? என்ற நியாயமான சந்தேகங்களும் ஏற்படவே செய்கின்றன. வளைவதும், பின் நெளிவதும் நதிகளுக்கு வேண்டுமானால் அழகாக இருக்கலாம். ஆனால், சட்டக் கட்டமைப்புக்கு உட்பட்ட நாட்டுக்கு அது பொருந்தாது. இந்த வளைவை அநுர அரசு நேர்செய்ய வேண்டும். செய்யுமா?




## இலஞ்சம் பெறுபவர்களில் பொலிஸாருக்கு முதலிடம்




கொழும்பு, செப்.29

**இலஞ்சம் அல்லது ஊழல் என்பவற்றுடன் அதிகளவில் தொடர்புடைய முதல் 10 பொதுச்சேவைகளில் பொலிஸ் திணைக்களம் முதலிடம் வகிக்கிறது.**

அடுத்தடுத்த இடங்களில் அரசியல்வாதிகள், சுங்கம், குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம், பாடசாலைகள், அமைச்சுகள் என முக்கியமான நிறுவனங்கள் உள்ளன என்று இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணைகள் தொடர்பான ஆணைக்குழுவின் தலைவர் நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் குறிப்பிடுகையில், மக்களின் நிலைப்பாட்டுக்கமைய இலஞ்சம் அல்லது ஊழல் என்பவற்றுடன் அதிகளவு தொடர்புடையது பொலிஸார் என எம்மால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.
இதனால் நாட்டில் சட்டம், அமைதி முறையாக நடைமுறைப்படுத்தப்படாமை, மோசடிக் கலாசாரம் நாட்டில் தலைதூக்கியுள்ளமை ஊழல் தொடர்பில் மக்கள் உரிய நடவடிக்கை எடுக்காமை என்பன தலைதூக்கியுள்ளன. இவற்றை இல்லாதொழிப்பதறக்கான நடவடிக்கைகள் கடுமையாக எடுக்கப்படவேண்டும் - என்றார். (ச-இ)

## கேபிள் கார் விபத்து: உயிரிழப்பு உயர்வு!

கொழும்பு, செப்.29
குருநாகலிலுள்ள பௌத்த வன ஆச்சிரமத்தில் அண்மையில் இடம்பெற்ற கேபிள் கார் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மற்றொரு பிக்குவும் நேற்று உயிரிழந்துள்ளார். இவர் குருநாகல் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்தபோதே உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் ஏற்கனவே 7 பிக்குகள் உயிரிழந்த நிலையில் தற்போது உயிரிழப்பு எட்டாக உயர்ந்துள்ளது. மேலும் ஐந்து பிக்குகள் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர். (ச-இ)

## 664 பேர் கைது

நாடு முழுவதும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் குற்றத்தடுப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்பு விசேட நடவடிக்கையின் கீழ், நேற்று 664 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பல்வேறு குற்றச் செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், இந்த நடவடிக்கையில் 28 ஆயிரத்து 778 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 254 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 163 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மது அருந்தி வாகனம் செலுத்துதல் மற்றும் கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் தொடர்பாக 56 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, செப்.29
சீர்ற்ற வானிலை காரணமாக 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பொலிஸார் பதவியுயர்வு; செயல்முறையில் தவறு!

### உச்சநீதிமன்றில் மனுத்தாக்கல்!

கொழும்பு, செப்.29
உதவிப்பொலிஸ் கண்காணிப்பாளர் பதவிக்கு அண்மையில் 45 அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகளில் தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கூறி, தலைமை ஆய்வாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் உள்ளிட்ட 170 பொலிஸார் உள்ளடங்கிய ஒரு குழுவினர் உச்ச நீதிமன்றத்தில் மூன்று அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். கடந்த காலங்களில் பதவி உயர்வுகள் மூப்பு அடிப்படையில் அமைந்ததற்கு மாறாக, இந்தச் செயல்முறையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)

நாளை
செவ்வாய்க்கிழமை - புரட்டாதி 14
30.09.2025
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 03.02 - 04.32

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுங்குமுறை மதிப்பீடின்றி யாழ்.ஆரியகுளம் சீரமைப்பு!

## விசாரணை நடத்துவதற்கு மாநகரசபை அமர்வில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.29

யாழ்ப்பாண மாநகரசபையின் முக்கியத்துவம் வாய்ந்த ஆரியகுளத்தின் அபிவிருத்தித்திட்டம் தொடர்பில் சரியான தரவுகள் மாநகரசபையிடம் இல்லை. எனவே மாநகர நியமங்களுக்கு முரணாக இடம்பெற்ற ஆரியகுளத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் சபையினால் குழு நியமிக்கப்பட்டு விசாரணை செய்யப்படவேண்டும் என யாழ். மாநகரசபை உறுப்பினர் என்.எம்.அப்துல்லாஹ் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது மாநகரசபை உறுப்பினர் என்.எம்.அப்துல்லாஹ் முன்மொழிந்த பிரேரணையில்,

முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணனின் ஆட்சிக்காலத்தில் புனரமைக்கப்பட்டு கடந்த 2021 ஆம் ஆண்டு மாநகர சபையினால் மக்கள் பயன்பாட்டுக்குக் கையளிக்கப்பட்டது. மாநகரசபைக்குச் சொந்தமான மேற்படி ஆதனம் முறையான எவ்வித ஆவணங்களும் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதிபெறப்படாமல் மாநகரசபையின் கணக்குப்பகுதி, வேலைப்பகுதி மற்றும் திட்டமிடல் பகுதி ஆகியவற்றின் ஊடாகவன்றி, முன்னாள் முதல்வரின் தன்னிச்சையான முடிவுக்கு அமைவாக வெளிநபர்களிடமிருந்தே நிதி பெறப்பட்டதுடன், ஒப்பந்ததாரரும் மாநகரசபையினால் விலைமனு கோரப்படாமல் வெளியிலிருந்தே தெரிவுசெய்யப்பட்டும் வழங்கப்பட்டது.

இந்த அபிவிருத்தித்திட்டம் தொடர்பான எவ்வித ஆவணங்களோ, பதிவுகளோ, மதிப்பீடுகளோ கொடுக்கல் - வாங்கல்கள் தொடர்பான தகவல்களோ மாநகரசபையிடம் இதுவரை இல்லை என்று குறிப்பிட்டார். இதுதொடர்பில் சபையில் நீண்ட வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற நிலையில் இறுதியில் முதல் நடவடிக்கையாக மேற்படி முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை தொடர்பில் மாநகரசபையின் இலஞ்ச ஊழல் தடுப்புக்குழு ஊடாக உரிய விசாரணைகளை மேற்கொண்டு அடுத்த சபைக்கூட்டத்தில் அறிக்கையை முன்வைப்பது என்றும் குறித்த குழுவின் அறிக்கையின் ஏற்புடமை தொடர்பில் சபையில் விவாதித்து தேவையேற்படின் விசாரணைக்குழு அமைப்பது குறித்து பரிசீலிப்பது என்றும் சபையில் தீர்மானிக்கப்பட்டது. (ச-20)

# ஏக்கிய ராஜ்ஜிய அரசமைப்பை நிறைவேற்ற இரகசிய நகர்வு!

## தமிழ் மக்கள் திரண்டு எதிர்க்கவேண்டுமென கஜேந்திரகுமார் எம்.பி. அழைப்பு

கொழும்பு, செப்.29

**தற்போதைய அரசாங்கம் ஏக்கிய ராஜ்ஜிய அரசமைப்பைப் புதிய அரசமைப்பாகக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு உட்கட்சி ரீதியாகக் கணிசமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நடவடிக்கை தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. அடுத்தகட்டமாக விரைவில் அரசமைப்புத் தொடர்பில் ஏனைய அரசியற்கட்சிகளுடனும் பேசப்பட்டு, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் கலாநிதி நிஹால் அபேயசிங்க இவ்வாறான முன்னெடுப்புகள் நடப்பதை சர்வதேச மட்டத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். இது தொடர்பாக வடக்கு- கிழக்குத் தமிழ்மக்கள் மத்தியில் தீவிரமான பரப்புரைகளை மேற்கொண்டு ஏற்படவுள்ள ஆபத்தைத் தடுத்துநிறுத்தவேண்டும். இலங்கை தமிழரசுக் கட்சியில் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் தற்போது வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ஆதரவு வழங்கும் பட்சத்தில் 85 வீதமான வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏக்கிய ராஜ்ஜிய அடிப்படையிலான புதிய அரசமைப்பை நிறைவேற்றிக்காட்டும் அபாய நிலைமை உள்ளது.

தமிழ் மக்கள் நேரடியாக எதிர்ப்பதன் ஊடாகவே ஏக்கிய ராஜ்ஜிய அரசமைப்பைத் தோற்கடிக்க முடியும். தமிழ் மக்கள் மத்தியில் இதுதொடர்பான தீவிரமான பரப்புரைகளை விரைவாக முன்னெடுக்கவேண்டும். தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் தமக்குக் கிடைத்த மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து, நேர்மையாகப் பயணிக்க விரும்பினால் எம்முடன் இணைந்து ஏக்கிய ராஜ்ஜிய அரசமைப்பைத் தோற்கடிக்க முன்வர வேண்டும் - என்றார். (எ-66)

# இராணுவத்தளபதி பங்கேற்ற நிகழ்வில் ஊடகவியலாளர்களுக்குக் கதவடைப்பு



வவுனியா,செப்.29

இலங்கை இராணுவத்தின் 76 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. இதில் இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோ பங்கேற்றிருந்தார்.

அது தொடர்பான செய்தியைச் சேகரிப்பதற்கு வவுனியா பிராந்திய ஊடகவியலாளர்கள் அங்கு சென்றிருந்தனர். இருப்பினும் அவர்கள் உள்நுழைய இராணுவ அதிகாரிகளால் அனுமதி மறுக்கப்பட்டது. இராணுவத்தின் ஊடகப்பிரிவுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. (க-110)



## பிரமந்தனாறில்

# ரூ. 75.63 மில்லியன் நிதியில் விவசாயப் பண்ணை அமைப்பு

கிளிநொச்சி, செப்.29

கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு கிராமிய அபிவிருத்திப் பணியகத்தின் 75.63மில்லியன் ரூபா நிதியில் காலநிலைக்குச் சீரமைவான விவசாயச் செய்கைப் பண்ணை கிளிநொச்சி பிரமந்தனாறுப் பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென ஒதுக்கப்பட்ட 10 ஏக்கர் பகுதியில் தற்போது துப்புரவுப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்தநிலையில் குறித்த பகுதியை கிளிநொச்சி மாவட்டச்செயலர் எஸ்.முரளிதரன் தலைமையிலான குழுவினர் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டனர். (ச-113)

# விழிப்புணர்வு நடைபவனி!

யாழ்ப்பாணம், செப்.29

சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் உளநல சிகிச்சைப் பிரிவினரினால் விழிப்புணர்வு நடைபவனி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது. மருத்துவமனையிலிருந்து ஆரம்பமான நடைபவனி பிரதான வீதி ஊடாக மந்திகை சிலையடிச்சந்தி ஊடாகச் சென்று சாவகச்சேரி வீதி ஊடாகப் பயணித்து மீண்டும் மருத்துவமனையைச் சென்றடைந்தது. (ச-100)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைதடி தென்கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் முதியோர் சங்கத்தைச் சேர்ந்த 52 முதியோர்கள் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆன்மிகத் தலங்களுக்கு அண்மையில் அழைத்துச் செல்லப்பட்டனர். (ச-25, 9)





# உள்ளூராட்சி வார நிகழ்வு

மன்னார், செப்.29


'வளமான நாடும் அழகான வாழ்க்கையும்' எனும் தொனிப்பொருளில் உள்ளூராட்சி வார இறுதிநிகழ்வு கடந்த புதன்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் நகரசபையின் முதல்வர் டானியல் வசந்தன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகரப் பிரதேச செயலாளர் கா.காந்தீபன் மற்றும் மன்னார் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ம.சாந்தசீலன், மன்னார் நகரசபை உறுப்பினர்கள், பணியாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்களப் பிரதிநிதிகள், சர்வமதத் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு இடம்பெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-41-56)



ஆரோக்கியா நிதியுதவித் திட்டத்தின்கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மூன்று முதியவர்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது. (ச-25, 9)



# டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கைதடி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் டெங்குக் கட்டுப்பாட்டுப் பணிகள் அண்மையில் இடம்பெற்றன.

இதன்போது வீடுகள், பாடசாலைகள், அரச நிறுவனங்கள், சமய ஸ்தலங்கள், பொது இடங்கள் வெற்றுக்காணிகள் என்பன பார்வையிடப்பட்டு நீர் தேங்கும் கொள்கலன்கள் அகற்றப்பட்டதோடு, டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வும் மக்களுக்கு வழங்கப்பட்டது. (ச-25,9)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், செப்.29

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத்தெரிவும் யாழ். மாவட்ட சர்வோதய நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றன.

தலைவராக பேராசிரியர் சு.மோகனதாஸ், பொதுச் செயலாளராக மா.பேரம்பலம், பொருளாளராக சி.சிவனேசன், உபதலைவர்களாக த.நந்திவர்மன், செ.சுப்பிரமணியம், உபசெயலாளர்களாக ரதி குலசேகரம், சி.சிவரம்யா, நிர்வாக உறுப்பினர்களாக ப.சதானந்தன், கா.கார்த்திகேசு, எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, சி.ஜெயசங்கர், இ.நாகேந்திரராசா, இரா.செல்வராசா மற்றும் "காந்தீயம்" பத்திரிகை ஆசிரியராக எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தியும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-41-159)





நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் நவராத்திரி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன. கோலம் போடுதல், தோரணம் கட்டுதல், மாலை கட்டுதல், பண்ணிசைத்தல் மற்றும் நிறைகுடம் அமைத்தல் ஆகிய போட்டிகள் இடம்பெற்றன. (ச-9)



# 'ஆடு புலி ஆட்டம்' ஆவண நூல் வெளியீடு

கிளிநொச்சி, செப்.29ஏ

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பழையமாணவன் டர்சன் எழுதிய 2018ஆம் ஆண்டு மென்பந்து கிரிக்கெட் தேசிய ரீதியில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி சம்பியன்களாக மகுடம் சூடிய வரலாற்று வெற்றியின் வலி மிகுந்த பயணங்களைக் கூறும் 'ஆடு புலி ஆட்டம்' எனும் ஆவண நூல் வெளியீடு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக்குழுவின் தலைவருமான சிவஞானம் சிறீதரனினால் நூல் வெளியீடு செய்யப்பட்டது. (ச-41-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Invitation for Bids (IFB)
### VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA
### Provincial specific development grant - 2025

1. The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Vengalacheddikulam PradeshiyaSabha now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) listed in the table below.

| S. No | Bid No. | Source of Fund | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1 | PSDG/NP/VAV/ VCKPS/2025/LA R/04 | PSDG | Construction of menicfarm 5th circle Road Stage iv | 4.23 | C8& Above(Highw ay) | 43,000.00 | 30.12.2025 | 49 |
| 2 | PSDG/NP/VAV/ VCKPS/2025/LA R/05 | PSDG | Construction of Sinnasippikulam 1st Lane | 4.13 | C8& Above(Highw ay) | 42,000.00 | 30.12.2025 | 49 |

2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. Interested eligible bidders may obtain further information from **Secretary,Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar - Madawachchi Road (Email: cheddips@gmail.com)** from **09.00 Hrs to 15.00 Hrs** and inspect the bidding documents at the address **Secretary, VengalacheddikulamPradeshiyaSabha, Mannar - Madawachchi Road, Cheddikulam.**
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the **"Schedule/Bidding Data"** of the Procurement Document for works.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address **Secretary, Vengalacheddikulam PradeshiyaSabha, Mannar - Madawachchi Road Cheddikulam.** From **29.09.2025 until 12.10.2025 from 09.00 Hrs to 15.00 Hrs.** Upon payment of a non-refundable fee of **Three Thousand rupees only (3000.00). The method of payment will be by cash.**
6. Bids must be delivered to the address **Chairman, Divisional Procurement Committee, VengalacheddikulamPradeshiyaSabha, Mannar-Madawachchi Road, Cheddikulamonor before 14th October 2025 and 14.00 Hrs.** Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.
7. All bids must be accompanied by a Bid-Securityof an amount and validity date mentioned in the table above.
8. The pre-bid meeting will be held on **7.10.2025 at 14.00 Hrs** at the Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar- Madawachchi Road, Cheddikulam.

The address (es) referred to above is (are):

Chairman,
Divisional Procurement Committee.
Vengalacheddikulam PradeshiyaSabha,
Mannar- Madawachchi Road, Cheddikulam
(Telephone No: **024 2260914** Fax No: **024 2260913**)
**29.09.2025**

(CR 463541 E)


# தரமற்ற மருந்துகளால் ரூ.2,996.65 மில். இழப்பு

கொழும்பு, செப்.29

மருத்துவ விநியோகப் பிரிவுக்கு தரமற்ற மற்றும் சேதமடைந்த மருந்துகளை வழங்கிய மருந்து விநியோகஸ்தர்களிடமிருந்து கடந்த மார்ச் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 2,996.65 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது என்று தேசிய கணக்காய்வில் தெரியவந்துள்ளது.

தரமற்ற மற்றும் சேதமடைந்த மருந்துகளுக்கான செலவுகள், அதற்கான நிர்வாகக் கட்டணங்கள் மற்றும் கையிருப்பில் உள்ள மருந்துகளை அழிப்பதற்கான செலவுகள் என்பவற்றுடன் சேர்த்து இந்தத்தொகை அறவிடவேண்டியுள்ளது என்று கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையை அறவிடுவது நிச்சயமற்றநிலையில் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அறவிடப்படாமல் உள்ள இந்தத் தொகையை மருந்து விநியோகஸ்தர்களிடமிருந்து மீளப்பெறுவதற்கு விரைவான மற்றும் பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்கு கணக்காய்வு அலுவலகம் பரிந்துரை செய்துள்ளது. (ச-இ)


## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு ஆண் பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகி

(CR 463671 E)

077 810 6857, 075 974 2495, 021 226 5551

www.valvaieldershome.com



## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

### திருமதி சிவமணி நவசீலன்
### SLTS I



ஆசிரியர் பணியில் 25 வருடங்கள் சேவையாற்றி 28.09.2025 இல் ஓய்வு பெறும்

**திருமதி சிவமணி நவசீலன்**

ஆசிரியருக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் ஓய்வு காலத்தில் நோய் நொடியின்றி சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் மகிழ்ச்சியுடன் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

**சேவைவிபரம்**

- யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் 03.01.2000 - 13.06.2001
- யாழ்/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 14.06.2001 - 31.06.2003
- யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம் 01.07.2003 - 31.12.2003
- யாழ்/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் 01.01.2004 - 31.12.2013
- யா/ சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம் 01.01.2014 - 31.12.2016
- யா/ நுணாவில் மேற்கு அ.த.க பாடசாலை 01.01.2017 - 01.09.2019
- யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம் 02.09.2019 - 10.01.2021
- யா/ மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை 11.01.2021 - 12.10.2021
- யா/ மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம் 13.10.2021 - 28.09.2025

(CS 465561 E)

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யா/ மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம்



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு

**அமரர் வேலாயுதர் இராசமணி**

அவர்களின் சபிண்டீகரணக்கிரியைகள் நாளை (30.09.2025) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(CS 595281 E)

கைதடி மேற்கு, கைதடி.

குடும்பத்தினர்
077 774 6872, 077 926 0907


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரதேசசபை உறுப்பினர்களுக்கு இடர் முகாமைத்துவ செயமலர்வு



முல்லைத்தீவு செப்.28

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர்களுக்கு அனர்த்த அபாய முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்ட செயமலர்வு கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் திரு.கோகுலராஜா தலைமையிலான குழுவினரால் இந்தச் செயலமர்வு நிகழ்த்தப்பட்டது.

இதன்போது சட்டவிதிகள், முக்கியமான செயற்பாடுகள், மாவட்ட ஒருங்கிணைப்புப் பிரிவு, பிரதேசசபை, வட்டார உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் துறைகளிடையேயான கூட்டு ஒருங்கிணைப்பின் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

(ச-40,19)

## கட்டுப்பாடிழந்த...

துள்ளார். மோட்டார்சைக்கிளைச் செலுத்திவந்த இளைஞர் படுகாயமடைந்துள்ளார். இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.

சுடரொளியன் தனுஷ்கா (வயது -5) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். மந்துவிலைச் சேர்ந்த குடும்பம் ஒன்று பூநகரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பியபோது இந்த விபத்து நடந்துள்ளது.

ஒரு மோட்டார்சைக்கிளில் உயிரிழந்த சிறுமியின் தாய், சித்தி மற்றும் இளைஞர் என நால்வர் பயணித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. மோட்டார் சைக்கிள் சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகே மின்கம்பத்துடன்மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. கடும் காற்று மற்றும் கவனக் குறைவால் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும், சிறுமி தலைக்கவசம் அணியவில்லை என்றும் கூறப்படுகின்றது.

விபத்தில் சிக்கிக் காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனை கொண்டு செல்ல அந்தவழியால் சென்ற எவரும் உதவவில்லை என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்செயலாக அந்த வழியால் வந்த யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி காயமடைந்தவர்களுக்கு முதலுதவி அளித்ததுடன், அம்புலன்ஸ்களுக்கு அறிவித்துள்ளார். வாகனம் ஒன்றில் சிறுமியை மருத்துவமனைக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருந்த நிலையில், சாவகச்சேரியில் இருந்து அம்புலன்ஸ் வந்ததை அடுத்து சிறுமி அம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அதேவேளை, பூநகரியில் இருந்து வந்த அம்புலன்ஸ் மூலம் காயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். தலையின் பின்பகுதியில் காயமடைந்திருந்த சிறுமி பின்னர் உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் உடல் சாவகச்சேரி மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-எ-26-28)

## மன்னாரை...

நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மன்னார் மாவட்டம் முழுவதும் நாளை (இன்று) திங்கட்கிழமை பொதுமுடக்கத்துக்கு அழைப்பு விடுக்கின்றோம். அனைத்துச் செயற்பாடுகளையும் முழுமையாக நிறுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பொதுப்போக்குவரத்துக்கள் அனைத்தையும் நிறுத்தி, வர்த்தக நிலையங்களை மூடி மாவட்டத்தை ஸ்தம்பிதமடையச் செய்து எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து கண்டனப் பேரணி ஆரம்பமாகும். இந்தப்பேரணி மன்னார் பஸார் பகுதியை அடைந்து அங்கு ஆர்ப்பாட்டம் பிற்பகல் 1.30 மணிவரை முன்னெடுக்கப்படும். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் எமது கோரிக்கைகள் அடங்கிய ஜனாதிபதிக்கான மனு மன்னார் மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்படும்.

மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்படும் எமது உரிமைக்கான போராட்டத்தில் மீனவர்கள், வர்த்தகர்கள்,பொது போக்குவரத்து சேவையை முன்னெடுப்போர் உட்பட அனைத்துத்தரப்பினரும் கலந்து கொண்டு பூரண ஆதரவை வழங்க வேண்டும் - என்றார்.

(அ-எ-56)

## அமல்...

கல்கிசை மாநகரசபையின் உறுப்பினருமான அமல் சில்வா, போலி ஆவணங்களைப் பயன்படுத்திப் பதிவு செய்யப்பட்ட வாகனங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஊழல் ஒழிப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊழல் ஒழிப்புப் பிரிவுப் பொலிஸரால் 2024 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியும், மற்றும் கடந்த ஜனவரி முதலாம் திகதியும் 3 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான மிட்சுபிஸி ரக ஜீப் வாகனமொன்றும், சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான இரண்டு லேண்ட் ரோவர் ரக ஜீப் வாகனங்களுமே கைப்பற்றப்பட்டிருந்தன.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய தற்போது அமல் சில்வா கைது செய்யப்பட்டுள்ளார். இந்த வாகனங்கள் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களின் பதிவு எண்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமை பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில்கண்டறியப்பட்டுள்ளது. சந்தேகநபர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும், விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ-எ-இ)

## அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

வாழுலகில்

26.08.1940

வானுலகில்

02.09.2025



கடந்த 02.09.2025 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

**அமரர் சிவக்கொழுந்து இராசையா**

அவர்கள் எம்மை விட்டு பிரிந்த செய்தியறிந்து எமது துயர் பகிர நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனுதாபச் செய்திகளை தொலைபேசி, மின்னஞ்சல் மூலமும் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் (30.09.2025) செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் 02.10.2025 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**புத்தூர் கிழக்கு,**
**புத்தூர்.**

இங்ஙனம் இராசையா குடும்பத்தினர்
077 900 3712

## 11ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்

19.09.1985

மறைவு

01.10.2014



**அமரர் சிவராசா நிசாந்த்**


திதி : வளர்பிறை பூர்வபட்ச சப்தமி (29.09.2025)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

49/1 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.


என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தியாகதீபம் திலீபனின் 38ஆவது நினைவுநாளை முன்னிட்டு உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பினரால் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபிக்கு அருகில் வைத்து பயன்தரு மரக்கன்றுகள் கடந்த வெள்ளிக்கிழமை பொதுமக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலம்பெயர் பெண்ணொருவர் நிதிப் பங்களிப்பு வழங்கியுள்ளார். (ச-25, 66)

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்ட நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை லண்டனில் அடையாள உணவுதவிர்ப்பும், விழிப்புணர்வுப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றனர். (இ-66-27)





## கபடி அணிக்கு சீருடை

யாழ்ப்பாணம்.செப்.29

35ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் கபடிப்போட்டிக்காக, யாழ்ப்பாணம் மாவட்டம் சார்பில் செல்லவுள்ள பருத்தித்துறைப் பிரதேச அணியினருக்கான சீருடை நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. சீருடையின் அனுசரணையாளரும், பருத்தித்துறை நகரசபையின் தவிசாளருமான வின்சன் போல் டக்ளஸ் போல் அணியினரிடம் சீருடையை வழங்கினார். (சு-66)



தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்டக் கிளை அமைப்பின் 'நேசக்கரம் பிரஜைகள் குழு' அங்கத்தவர்களுக்கும், மன்னார் நகரசபை உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் மன்னார் நகரசபை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (25-56)

வேலணைப் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு அலகினால் சிறுவர் தினத்தை முன்னிட்டு சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்தில் சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. (ச-25, 9)





## ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்

கிளிநொச்சி, செப்.29

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாம் காலாண்டுக்கான ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் கடந்த புதன்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது உள்வள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, காணி, வீதி அபிவிருத்தி, குடிநீர் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் மற்றும் பெண்கள், சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அதற்கான தீர்வுகள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகளுடன் முன்னோக்கிச் செல்லுதல் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டன. (ச-41-55)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் விசர்நாய்க்கடி தொடர்பான விசேட விழிப்புணர்வு நிகழ்வு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. (25.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்...

மீட்கப்பட்டுள்ளார். செ.சஜேந்திரன் (வயது-30) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
வடமராட்சி, கரவெட்டியைச் சேர்ந்த இவர், யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அறையொன்றில் தங்கிருந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## மக்கள்...

கட்டைக்காடு பொதுமக்களின் ஒழுங்குபடுத்தலில் கட்டைக்காடு பங்குத்தந்தை தலைமையில் நேற்றுக்காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "அழிக்காதே அழிக்காதே மன்னாரை அழிக்காதே", "வேண்டாம் வேண்டாம் காற்றாலைத் திட்டம் வேண்டாம்", "அள்ளாதே அள்ளாதே எமது மண்ணை அள்ளாதே" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு, கோசங்களை எழுப்பினர்.
மன்னார் தீவில் எமது மக்களுடைய சாத்வீகப் போராட்டம் அரசு இயந்திரத்தால் ஒடுக்கப்படுவதை கட்டைக்காடு பொதுமக்களாக நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.
அரச இயந்திரம் மதச்சாயம் பூசி மக்களின் சாத்வீகப் போராட்டத்துக்கு சேறு பூச முனையாமல் அவர்களுடைய இறைமையைப் பாதுகாப்பதற்குக் கொடுத்த வாக்குறுதிகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என்று கட்டைக்காடு பங்குதந்தை வசந்தன் அடிகளார் வலியுறுத்தினார். (அ-எ-27)

## நகரசபை...

16 உறுப்பினர்களைக் கொண்ட வல்வெட்டித்துறை நகரசபைக்கு கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வட்டார ரீதியாகப் போட்டியிட்ட ஏழு உறுப்பினர்கள் வெற்றி பெற்று தமிழ்த் தேசியப் பேரவை ஆட்சி அமைத்துள்ளது.
தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் தெரிவு செய்யப்பட்ட அப்புலிங்கம் உதயசூரியன் கடந்த மாதம் 27ஆம் திகதி தனது பதவி விலகல் தொடர்பில் தேர்தல் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.
இந்தப் பதவி விலகல் தேர்தல் திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் அந்த வெற்றிடத்துக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.
இது தொடர்பான ஆவணம் கடந்த வாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதும் விரைவில் எம்.கே.சிவாஜிலிங்கம் நகரசபை உறுப்பினராக பதவி ஏற்பார் என்றும் தெரிய வருகின்றது. (அ-எ-100)

## வீதியின்...

வவுனியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், அதன்பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தார்.
மன்னார் காற்றாலை விடயம் தொடர்பாக கேள்வி எழுப்பியபோது, மன்னார் காற்றாலை விடயத்தில் ஜனாதிபதி தலையிட்டுள்ளார், அந்த விடயம் தொடர்பில் கருத்துக்கூற விரும்பவில்லை என்று பதிலளித்துள்ளார்.
மன்னார் காற்றாலைக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மற்றும் பங்குத்தந்தைகள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் கேள்வி எழுப்பியபோது, வீதியின் குறுக்காக நின்றால் பொலிஸ் வெளியே போகுமாறுதானே சொல்வார்கள். அதன் யதார்த்தம் எமக்கு விளங்குகின்றது. ஆயினும் அந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார். (அ-எ-110)

## அனைத்தையும்...

வாழ்க்கைத்தரம் மேம்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் துறை மன்றத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. அந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே வடக்கு ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு எமது மாகாணம் 4 சதவீதத்தையே பங்களிப்புச் செய்கின்றது. இதை 10 அல்லது அதைவிடக் கூடியளவு உயர்த்துவதற்குத் தேவையான வளம் எமது மாகாணத்தில் இருக்கின்றது. நாங்கள் எங்கள் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவில்லை.
இன்று நவீன முறைகள் பல வந்துள்ளன. அதை நோக்கிச் செல்லவேண்டும். கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. எமது மக்கள் அதையும் எதிர்த்தார்கள். சுத்திகரிக்கப்பட்ட பின்னர் செறிவு கூடிய நீர் கடலுக்குச் செல்லும் போது மீன் வளம் அழிவடையும் என்றார்கள். ஆனால் இன்று அந்தப் பகுதியில் அதிகளவு மீன்கள் பிடிபடுகின்றது என்று கூறுகின்றார்கள். அதைப்போல பளையில் காற்றாலை அமைக்கப்பட்டபோது மழை வராது என்று சொன்னார்கள். ஆனால் இன்று அவ்வாறான நிலைமை இல்லை.
எந்தவொரு விடயத்தையும் எதிர்ப்பது என்ற மனநிலையில் சிந்திக்காமல் அந்தத் திட்டங்கள் ஊடாக எங்களுக்கு என்ன நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற கோணத்தில் சிந்திக்கவேண்டும் - என்றார். (அ-ச-இ)

## ரயிலுடன்...

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி நேற்றுக்காலை பயணித்த ரயில், காலை சௌத்பார் புகையிரத நிலையத்தில் தரித்து நின்று மீண்டும் பயணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. அதன் பின்னர், சௌத்பார் தள்ளாடி புகையிரத வீதி, இரட்டை கண் பாலத்துக்கு அருகில் ரயில் தண்டவாளத்தில் உடல் பாகங்கள் சிதறிய நிலையில் சடலம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
நீர்கொழும்பைச் சேர்ந்த 60 வயதுடைய ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறந்தவரது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், ஒரு தொகைப் பணம், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திகதியிடப்பட்ட தலைமன்னாருக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரயில் சீட்டு என்பன மீட்கப்பட்டுள்ளன.
மீட்கப்பட்ட சடலம் மன்னார் பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-56)

## நினைவு...

கூரல்களுக்கான சுதந்திரத்தை முழுமையாக வழங்கியுள்ளது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடருக்கு சமாந்தரமாக வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான குழுவின் 29ஆவது கூட்டம் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தக்கூட்டத்தில், கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை விவகாரம் ஆராயப்பட்டது.
இந்தக் கூட்டத்தில் இலங்கை சார்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜெ.தற்பரன், அவ்வலுவலகத்தின் உறுப்பினர் அஜித் தென்னக்கோன், ஐ.நா.வுக்கான இலங்கையின் வதிவிடப்பிரதிநிதிஹிமாலி அருணதிலக ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் நேரடியாகக் கலந்துகொண்டனர்.
வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, பொலிஸ் திணைக்களம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளடங்கலாக இந்த விவகாரத்துடன் தொடர்புடைய கட்டமைப்புகளின் பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து நிகழ்நிலை முறைமையில் பங்கேற்றனர்.
காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் செயற்பாடுகள், மனிதப்புதைகுழி அகழ்வு நடவடிக்கைகள், இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்ட நிராகரிப்பு, வலிந்து காணாமலாக்கப்படல் விவகாரம் தொடர்பில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு வழங்கப்படும் பயிற்சிகள், சத்துருக்கொண்டான் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலைகளின் மீள்விசாரணை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் குழுவில் அங்கம் வகிக்கும் அறிக்கையாளர்களால் கேள்விகள் எழுப்பப்பட்டன.
அவற்றுக்குப் பதிலளித்த அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கான அரசியல் தன்முனைப்பு எமது அரசாங்கத்திடம் உள்ளது. இது தொடர்பான விசாரணைகள் உரியவாறு முன்னெடுக்கப்படும்.
மனிதப்புதைகுழி அகழ்வைப் பொறுத்தவரை, அந்தப் பணிகளுக்காகப் போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை உரியவாறு முன்னெடுக்கப்படுகின்றன.
நிபுணத்துவம் உள்ளிட்ட உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் சர்வதேச சமூகத்திடம் அதைக் கோருவதற்குத் தயாராக உள்ளோம்.
கடந்த காலங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் போன்றவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் தன்முனைப்பு அரசாங்கங்களுக்கு இல்லாததால் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் உள்ளிட்ட கட்டமைப்புகள் செயற்திறன்மிக்கவகையில் இயங்கவில்லை. ஆனால் எமது அரசாங்கத்திடம் அந்த அரசியல் தன்முனைப்பு இருப்பதால் இந்தக் கட்டமைப்புகள் உரியவாறு இயங்குவதற்கு அவசியமான வளங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## தமிழக...

பட்டுள்ளனர். நேற்று அதிகாலை நெடுந்தீவுக்கு அருகே தமிழக மீனவர்கள் 12 பேரும் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களின் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.
கைதுசெய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.
கைதுசெய்யப்பட்டவர்கள் ஊர்காவற்றுறை நீதவானின் இல்லத்தில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (அ-எ-இ)

## மஹிந்தவின்...

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கதிர்காமத்தில் இருந்து கொழும்புக்கு செல்லும் வழியில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது என்று ஐக்கிய தேசிய கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
இந்தச் சந்திப்பின்போது, தான் சிறையில் இருந்த காலத்தில் மஹிந்த ராஜபக்ச ஆற்றிய பங்களிப்புக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்துள்ளார். மஹிந்த ராஜபக்சவின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வு தொடர்பாக விசாரித்தார் என்று ஐக்கிய தேசியக் கட்சி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## தோட்டத்துக்கு...

பட்டுள்ளார். யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த சி.ராஜபாரதி (வயது-60) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.
நேற்றுமுன்தினம் தோட்டத்துக்குச் செல்வதாகக் கூறிச்சென்றவர் வீடு திரும்பாத நிலையில், உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றுள்ளனர். அவர் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## திடீர்...

நேற்றுமுன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில் உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றபோது அவர் திடீரென சுகவீனமுற்றுள்ளார். அதையடுத்து அவர் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் மயக்கமடைந்துள்ளார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம் குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செம்மணிப் போராட்டத்துக்கு அரசியற்கட்சியினரும் ஆதரவு

யாழ்ப்பாணம்,செப்.29
தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குச் சர்வதேச நீதிகோரி, யாழ்.செம்மணி வளைவுப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில், அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றி ஆதரவு தெரிவித்தனர்.
வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது. போராட்டத்தில் பங்குபற்றியுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுடன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ்த்தேசியப் பேரவையின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்களும் இணைந்து ஆதரவு தெரிவித்தனர். (சு-66)


## ஆன்மிக உரை

யாழ்ப்பாணம்,செப்.29
நவராத்திரி விரதத்தை முன்னிட்டு நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மிக உரை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இன்று திங்கட்கிழமை படிக்க அல்லது தியானிக்கவேண்டிய நேரம் எது? எனும் தலைப்பிலும், நாளை செவ்வாய்க்கிழமை படிக்க அல்லது தியானிக்கவேண்டிய சூழல் எது? எனும் தலைப்பிலும், நாளைமறுதினம் புதன்கிழமை கல்வி அறிவு ஞானம் வெற்றி எனும் தலைப்பிலும் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார். (ச-66)



## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.29
ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் செ.பகீரதன் தலைமையில் கல்விக் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.
நிகழ்வில் விருந்தினராக வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் ப.அருந்தவம் கலந்து சிறப்பித்தார். (ச-25,27)



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளிடையே நவராத்திரி தினப் போட்டிகள் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டன. (ச-25,9)

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெரமுனவே ஆட்சி அமைக்கும்

### முன்னாள் அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு,செப்.29
அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியே ஆட்சியைக் கைப்பற்றும் என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், அச்சம் அறியாத தலைவரே மஹிந்த ராஜபக்ச. அவரைப் போலவே நாமல் ராஜபக்சவும் நாடாளுமன்றில் துணிவுடன் அரசியல் சமரில் ஈடுபடுகின்றார். நாமலின் துணிவுக்கு அஞ்சியே ஆளுங்கட்சியினர் அவரைக் குறிவைத்துள்ளனர். போலிக்குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்றனர். அரசாங்கத்தின் அச்சுறுத்தல்களுக்கு நாம் அடிபணியமாட்டோம். எமது பயணம் தொடரும்.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி மக்கள் சக்தியால் வலுப்படுத்தப்படும். அடுத்த தேசியமட்டத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஆட்சி மலரும். எமது கட்சியில் இருந்தே ஜனாதிபதி மற்றும் பிரதமர் தெரிவுசெய்யப்படுவர்-என்றார். (சு-44)

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
புதிய கல்வி ஆண்டு 2026
புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
புதிய தரம்-06
தமிழ் மொழி மூல, English Medium
வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2025 (புதன்கிழமை)
மாலை 3:30 - 5:30 வரை
அனுமதி வழங்கப்படுகிறது

TECHNO WORLD
A/L தொழில்நுட்பக் கல்லூரி
விசேட செயலமர்வு
திகதிகளில் மாற்றம்
11, 12, 13 October 2025
பொறியியல் தொழில்நுட்பவியல்
காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.15 மணிவரை
இடம் :- வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
077 017 5346

காணி விற்பனைக்கு
பலாலி வீதியில் அம்மாச்சிக்கு முன்பாக அமைந்துள்ள 8 பரப்பு 8 குழி காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 7280 268

மணல் விற்பனைக்கு
கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.
- தென்மராட்சி 50,000
- யாழ்மாவட்டம் 55,000
- வடமராட்சி 55,000
விநியோகிக்கப்படும். மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.
தொடர்புகளுக்கு:
076 324 9977

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண்/பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 076 632 3554



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் ... அவர்களது பணிமனையில் 29.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org